www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com

10ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு - ஏப்ரல் - 2024

பதிவு எண்.

PART - III

## கணிதம் (விடைகளுடன்)

**கால அளவு :** 3.00 மணி நேரம்] [**மொத்த மதிப்பெண்கள் :** 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளை கொண்டது.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**14 × 1 = 14**

1. $n(A \times B) = 6$ மற்றும் $A = \{1, 3\}$ எனில் $n(B)$ ஆனது :
(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 6

2. $f : A \to B$ ஆனது இருபுறச் சார்பு மற்றும் $n(B) = 7$ எனில், $n(A)$ ஆனது :
(அ) 7 (ஆ) 49 (இ) 1 (ஈ) 14

3. 1 முதல் 10 வரையுள்ள (இரண்டு எண்களும் உட்பட) அனைத்து எண்களாலும் வகுபடும் மிகச்சிறிய எண் :
(அ) 2025 (ஆ) 5220 (இ) 5025 (ஈ) 2520

4. ஒரு கூட்டுத் தொடர் வரிசையில் 31 உறுப்புகள் உள்ளன. அதன் 16-வது உறுப்பு $m$ எனில், அந்தக் கூட்டுத் தொடர் வரிசையில் உள்ள எல்லா உறுப்புகளின் கூடுதல் :
(அ) $16m$ (ஆ) $62m$ (இ) $31m$ (ஈ) $\frac{31}{2}m$

5. $x^4 + 64$ - ஐ முழு வர்க்கமாக மாற்ற பின்வருவனவற்றுள் எதைக் கூட்ட வேண்டும்?
(அ) $4x^2$ (ஆ) $16x^2$ (இ) $8x^2$ (ஈ) $-8x^2$

6. ஒரு நேரிய சமன்பாட்டின் வரைபடம் ஒரு ________ ஆகும்.
(அ) நேர்க்கோடு (ஆ) வட்டம்
(இ) பரவளையம் (ஈ) அதிபரவளையம்

7. $\Delta ABC$ -யில் $DE \parallel BC$, $AB = 3.6$ செ.மீ, $AC = 2.4$ செ.மீ மற்றும் $AD = 2.1$ செ.மீ எனில், AE-யின் நீளம் :
(அ) 1.4 செ.மீ (ஆ) 1.8 செ.மீ
(இ) 1.2 செ.மீ (ஈ) 1.05 செ.மீ

8. வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்?
(அ) ஒன்று (ஆ) இரண்டு
(இ) முடிவற்ற எண்ணிக்கை (ஈ) பூஜ்ஜியம்

9. $(-5, 0)$, $(0, -5)$ மற்றும் $(5, 0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு :
(அ) 0 ச.அலகுகள் (ஆ) 25 ச.அலகுகள்
(இ) 5 ச.அலகுகள் (ஈ) 10 ச.அலகுகள்

10. $x = a\tan\theta$ மற்றும் $y = b\sec\theta$ எனில்,
(அ) $\frac{y^2}{b^2} - \frac{x^2}{a^2} = 1$ (ஆ) $\frac{x^2}{a^2} - \frac{y^2}{b^2} = 1$
(இ) $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ (ஈ) $\frac{x^2}{a^2} - \frac{y^2}{b^2} = 0$

11. 4 செ.மீ உயரமும், 10 செ.மீ அடிப்புற விட்டமும் கொண்ட ஒரு நேர்வட்ட உருளையின் வளைபரப்பு :
(அ) 40 π சதுர அலகுகள் (ஆ) 20 π சதுர அலகுகள்
(இ) 14 π சதுர அலகுகள் (ஈ) 80 π சதுர அலகுகள்

12. சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றும் ஒரு கோளத்தின் கன அளவுகளின் விகிதம் :
(அ) 1 : 2 : 3 (ஆ) 2 : 1 : 3
(இ) 1 : 3 : 2 (ஈ) 3 : 1 : 2

13. கொடுக்கப்பட்ட மதிப்புகளில் எவை ஒரு நிகழ்ச்சியின் நிகழ்தகவாக இருக்க முடியாது?
(அ) 0 (ஆ) 0.5 (இ) 1.05 (ஈ) 1

14. ஒரு நபருக்கு வேலை கிடைப்பதற்கான நிகழ்தகவானது $\frac{x}{3}$. வேலை கிடைக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு $\frac{2}{3}$ எனில், $x$-இன் மதிப்பானது :
(அ) 2 (ஆ) 1 (இ) 3 (ஈ) 1.5

### பகுதி - II

**குறிப்பு :** **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**10 × 2 = 20**

15. $A \times B = \{(3, 2), (3, 4), (5, 2), (5, 4)\}$ எனில், A மற்றும் B -ஐக் காண்க.

16. $f(x) = 3x - 2$, $g(x) = 2x + k$ மற்றும் $fog = gof$ எனில், $k$ -ன் மதிப்பைக் காண்க.

17. $a^b \times b^a = 800$ என்றவாறு அமையும் இரு மிகை முழுக்கள் '$a$' மற்றும் '$b$' - ஐக் காண்க.

18. சுருக்குக : $\frac{4x^2y}{2z^2} \times \frac{6xz^3}{20y^4}$

19. பின்வரும் இருபடிச் சமன்பாட்டின் மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் காண்க. $x^2 + 8x - 65 = 0$



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**20.** ஒரு மனிதன் 18 மீ கிழக்கே சென்று பின்னர் 24 மீ வடக்கே செல்கிறான் தொடக்க நிலையிலிருந்து அவர் இருக்கும் தொலைவைக் காண்க.

**21.** $A(-3,9), B(a,b)$ மற்றும் $C(4,-5)$ என்பன ஒரு கோடமைந்த புள்ளிகள் மற்றும் $a+b=1$ எனில், $a$ மற்றும் $b$ -யின் மதிப்பைக் காண்க.

**22.** $(-1, 2)$ என்ற புள்ளி வழி செல்வதும், சாய்வு $\frac{-5}{4}$ உடையதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

**23.** $\sqrt{\frac{1+\cos\theta}{1-\cos\theta}} = \text{cosec}\theta + \cot\theta$ என்பதை நிரூபிக்கவும்.

**24.** ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

**25.** உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250 ச.மீ கொண்ட ஓர் உருளையின் கன அளவைக் காண்க.

**26.** கொடுக்கப்பட்ட தரவுப் புள்ளிகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக்கெழு ஆகியவற்றைக் காண்க.
25, 67, 48, 53, 18, 39, 44.

**27.** ஒரு நெட்டாண்டில் (leap year) 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**28.** 23 மற்றும் 12 ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க.

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். **42** க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **10 × 5 = 50**

**29.** $A = \{x \in \mathbb{N} \mid 1 < x < 4\}$, $B = \{x \in \mathbb{W} \mid 0 \le x < 2\}$ மற்றும் $C = \{x \in \mathbb{N} \mid x < 3\}$ எனில், $A \times (B \cup C) = (A \times C) \cup (A \times C)$ என்பதை சரிபார்க்கவும்.

**30.** $A = \{0, 1, 2, 3\}$ மற்றும் $B = \{1, 3, 5, 7, 9\}$ என்பன இரு கணங்கள் என்க. $f: A \to B$ எனும் சார்பு $f(x) = 2x + 1$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சார்பினைக் கொண்டு
(i) அம்புக்குறி படம் (ii) அட்டவணை
(iii) வரிசைச் சோடிகளின் கணம்
(iv) வரைபடம் ஆகியவற்றைக் குறிக்கவும்.

**31.** கூடுதல் காண்க : $9^3 + 10^3 + ........21^3$

**32.** $64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1$ என்பதன் வர்க்க மூலம் காண்க.

**33.** $A = \begin{bmatrix} 3 & 1 \\ -1 & 2 \end{bmatrix}$ எனில், $A^2 - 5A + 7I_2 = 0$ என நிறுவுக.

**34.** தேல்ஸ் தேற்றத்தை எழுதி நிரூபிக்கவும்.

**35.** $(-9,-2), (-8,-4), (2,2)$ மற்றும் $(1,-3)$ ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

**36.** $A(-4, 2)$, மற்றும் $B(6, -4)$ என்ற புள்ளிகளை இணைக்கும் மையக் குத்துக்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

**37.** இரு கப்பல்கள் கலங்கரை விளக்கத்தின் இரு பக்கங்களிலும் கடலில் பயணம் செய்கின்றன. இரு கப்பல்களிலிருந்து கலங்கரை விளக்கத்தின் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே $30^\circ$ மற்றும் $45^\circ$ ஆகும். கலங்கரை விளக்கத்தின் உயரம் 200 மீ எனில், இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவைக் காண்க. ($\sqrt{3}=1.732$).

**38.** 45 செ.மீ உயரமுள்ள ஓர் இடைக்கண்டத்தின் இரு புற ஆரங்கள் முறையே 28 செ.மீ மற்றும் 7 செ.மீ. எனில், இடைக்கண்டத்தின் கன அளவைக் காண்க.

**39.** 6 செ.மீ ஆரம் மற்றும் 15 செ.மீ உயரம் கொண்ட ஒரு நேர் வட்ட உருளை வடிவப் பாத்திரம் முழுவதுமாக பனிக்கூழ் (Ice-cream) உள்ளது. அந்தப் பனிக்கூழானது, கூம்பு மற்றும் அரைக்கோளம் இணைந்த வடிவத்தில் நிரப்பப்படுகிறது. கூம்பின் உயரம் 9 செ.மீ மற்றும் ஆரம் 3 செ.மீ எனில், பாத்திரத்தில் உள்ள பனிக்கூழை நிரப்ப எத்தனைக் கூம்புகள் தேவை?

**40.** 24, 26, 33, 37, 29, 31 ஆகியவற்றின் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

**41.** இரண்டு பகடைகள் ஒரு முறை உருட்டப்படுகின்றன. முதல் பகடையில் முக மதிப்பு இரட்டைப்படை எண் அல்லது முக மதிப்புகளின் கூடுதல் 8 ஆகக் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

**42.** $7+77+777+..........$ என்ற தொடர் வரிசையின் $n$ உறுப்புகளின் கூடுதல் காண்க.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2 × 8 = 16**

**43.** (அ) $PQ = 4.5$ செ.மீ, $\angle R = 35^\circ$ மற்றும் உச்சி R -யிலிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் $RG = 6$ செ.மீ. என அமையுமாறு $\Delta PQR$ வரைக.

(அல்லது)

(ஆ) 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 8 செ.மீ தொலைவில் P என்ற புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து PA மற்றும் PB என்ற இரு தொடுகோடுகள் வரைந்து அவற்றின் நீளங்களை அளவிடுக.

**44.** (அ) $y = 2x^2 - 3x - 5$ -யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $2x^2 - 4x - 6 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.

(அல்லது)

(ஆ) $xy = 24$, $x, y > 0$ என்ற வரைபடத்தை வரைக. வரைபடத்தைப் பயன்படுத்தி, (i) $x = 3$ எனில் $y$ -ஐக் காண்க மற்றும் (ii) $y = 6$ எனில் $x$ -ஐக் காண்க.

*****

# விடைகள்

## பகுதி - I

**1.** (இ) 3 **2.** (அ) 7 **3.** (ஈ) 2520
**4.** (இ) 31 $m$ **5.** (ஆ) $16x^2$
**6.** (அ) நேர்க்கோடு **7.** (அ) 1.4 செ.மீ
**8.** (ஆ) இரண்டு **9.** (ஆ) 25 ச. அலகுகள்
**10.** (அ) $\frac{y^2}{b^2} - \frac{x^2}{a^2} = 1$
**11.** (அ) 40 π சதுர அலகுகள்
**12.** (ஈ) 3 : 1 : 2
**13.** (இ) 1.05 **14.** (ஆ) 1

## பகுதி - II

**15.** $A \times B = \{(3,2), (3,4), (5,2), (5,4)\}$
$A = \{A \times B$-யின் முதல் ஆயத்தொலைவு உறுப்புகளின் கணம்$\}$. எனவே, $A = \{3,5\}$

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



B = {A× B-யின் இரண்டாம் ஆயத்தொலைவு உறுப்புகளின் கணம்}. எனவே, B = {2,4}
எனவே A = {3,5} மற்றும் B = {2,4}.

**16.**
$f(x) = 3x - 2,\ g(x) = 2x + k$
$fog(x) = f(g(x)) = f(2x + k)$
$= 3(2x + k) - 2 = 6x + 3k - 2$
இதனால், $fog(x) = 6x + 3k - 2$
$gof(x) = g(3x - 2) = 2(3x - 2) + k$
இதனால், $gof(x) = 6x - 4 + k$
$fog = gof$ (கொடுக்கப்பட்டுள்ளது)
$\therefore\ 6x + 3k - 2 = 6x - 4 + k$
$6x - 6x + 3k - k = -4 + 2 \Rightarrow k = -1$

**17.** எண் 800ஐ காரணிபடுத்தலாம்
$800 = 2\times 2 \times 2 \times 2 \times 2 \times 5 \times 5 = 2^5 \times 5^2$
எனவே, $a^b \times b^a = 2^5 \times 5^2$
இது அறிவுறுத்துவது $a = 2$ மற்றும் $b = 5$ (அல்லது) $a = 5$ மற்றும் $b = 2$

**18.** $$\frac{4x^2y}{2z^2} \times \frac{6xz^3}{20y^4} = \frac{3x^3yz^3}{5y^4z^2} = \frac{3x^3z}{5y^3}$$

**19.** α மற்றும் β என்பன கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் என்க.
$x^2 + 8x - 65 = 0$ இங்கு $a = 1, b = 8, c = -65$
$\alpha + \beta = -\frac{b}{a} = -8$ மற்றும் $\alpha\beta = \frac{c}{a} = -65$
$\alpha + \beta = -8,\ \alpha\beta = -65$

**20.** மனிதனின் நிலை A என்க.




பிதாகரஸ் தேற்றத்தைப் பயன்படுத்தி
$AC^2 = AB^2 + BC^2$
$= (18)^2 + (24)^2$
$= 324 + 576 = 900$
$AC = \sqrt{900} = 30$ மீ
∴ தொடக்க நிலையிலிருந்து அவர் இருக்கும் தொலைவு = 30 மீ.

**21.** $A(-3, 9),\ B(a, b),\ C(4, -5),$
$\downarrow\ \downarrow\ \downarrow$
$(x_1, y_1)\ (x_2, y_2)\ (x_3, y_3)$
இவை ஒரே கோட்டில் அமையும் புள்ளிகள் என கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் $(a + b = 1)$.

$\therefore\ \Delta$ -ன் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & x_2 & x_3 & x_4 \\ y_1 & y_2 & y_3 & y_1 \end{vmatrix}$ சதுர அலகுகள்

$= \frac{1}{2}\begin{vmatrix} -3 & a & 4 & -3 \\ 9 & b & -5 & 9 \end{vmatrix} = 0$

(∵ புள்ளிகள் ஒரே கோட்டில் அமைவன)
$(-3b - 5a + 36) - (9a + 4b + 15) = 0$
$(-3b - 4b) + (-5a - 9a) + (36 - 15) = 0$
$-7b - 14a = -21$
$-7(b + 2a) = -21$
$b + 2a = 3$
$(b + a) + a = 3$
$1 + a = 3$
$a = 2 \Rightarrow b = 1 - 2 = -1$

| | | |
|---|---|---|
| $a$ | = | 2 |
| $b$ | = | −1 |

**22.** $m = \frac{-5}{4}$
புள்ளி $= (-1, 2) = (x_1, y_1)$
$\Rightarrow\ y - 2 = \frac{-5}{4}(x - (-1))$
$[\because y - y_1 = m(x - x_1)]$
$\Rightarrow\ y - 2 = \frac{-5}{4}(x + 1)$
$\Rightarrow\ 4(y - 2) = -5(x + 1)$
$\Rightarrow\ 4y - 8 = -5x - 5$
$\Rightarrow\ 5x + 4y = 3 \Rightarrow 5x + 4y - 3 = 0$

**23.** $\sqrt{\frac{1+\cos\theta}{1-\cos\theta}} = \sqrt{\frac{1+\cos\theta}{1-\cos\theta}\times\frac{1+\cos\theta}{1+\cos\theta}}$
[1 − cos θ யின் இணையைக் கொண்டு தொகுதி மற்றும் பகுதியைப் பெருக்கவும்]
$= \sqrt{\frac{(1+\cos\theta)^2}{1-\cos^2\theta}} = \frac{1+\cos\theta}{\sqrt{\sin^2\theta}}$
[ஏனெனில் $\sin^2\theta + \cos^2\theta = 1$]
$= \frac{1+\cos\theta}{\sin\theta} = \operatorname{cosec}\theta + \cot\theta$

**24.** $r$ என்பது அரைக்கோளத்தின் ஆரம் என்க.
இங்கு அடிப்பரப்பு = $\pi r^2$ ச. அ = 1386 ச.மீ
அரைக்கோளத்தின் மொத்தப் பரப்பு = $3\pi r^2$ ச. அ
= 3 × 1386 = 4158
ஆகவே, அரைக்கோளத்தின் மொத்தப் புறப்பரப்பு 4158 ச.மீ ஆகும்

**25.** உருளையின் ஆரம் மற்றும் உயரம் முறையே $r$ மற்றும் $h$ என்க.
இங்கு, உயரம் $h = 2$ மீ, அடிப்பரப்பு = 250 ச.மீ
உருளையின் கனஅளவு = $\pi r^2 h$ க.அ
= அடிப்பரப்பு × $h$ = 250 × 2 = 500 மீ$^3$
எனவே, உருளையின் கனஅளவு = 500 க.மீ

**26.** மிகப் பெரிய மதிப்பு L = 67; மிகச் சிறிய மதிப்பு S = 18
வீச்சு R = L − S = 67 − 18 = 49

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



வீச்சுக்கெழு $= \dfrac{L-S}{L+S}$

வீச்சுக்கெழு $= \dfrac{67-18}{67+18} = \dfrac{49}{85} = 0.576$

**27.** ஒரு நெட்டாண்டில் 366 நாள்கள் உள்ளன. எனவே 52 முழு வாரங்களும் மற்றும் 2 நாள்களும் உள்ளன .
52 வாரங்களில், 52 சனிக்கிழமைகள் கிடைத்து விடும். மீதமுள்ள இரண்டு நாள்களுக்கான வாய்ப்புகள் கீழ்க்காணும் கூறுவெளியில் கிடைக்கும்.
S = (ஞாயிறு - திங்கள், திங்கள் - செவ்வாய், செவ்வாய்-புதன், புதன்-வியாழன், வியாழன்-வெள்ளி, வெள்ளி-சனி, சனி-ஞாயிறு).
$n$ (S) = 7
A என்பது 53-வது சனிக்கிழமை கிடைக்கும் நிகழ்ச்சி என்க .
எனவே A = [வெள்ளி-சனி, சனி-ஞாயிறு]
$n$ (A) = 2
53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவானது

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{2}{7}$$

$$P(A) = \frac{2}{7}$$

**28.** மீ.பொ.வ 23 மற்றும் 12

$23 = 12 \times 1 + 11$

$12 = 11 \times 1 + 1$

$11 = 1 \times 11 + 0$ $\qquad \therefore$ மீ.பொ.வ = 1

## பகுதி - III

**29.**
$A = \{x \in \mathbb{N} \mid 1 < x < 4\} = \{2, 3\}$
$B = \{x \in \mathbb{W} \mid 0 \le x < 2\} = \{0, 1\}$
$C = \{x \in \mathbb{N} \mid x < 3\} = \{1, 2\}$
$A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$
$B \cup C = \{0, 1\} \cup \{1, 2\} = \{0, 1, 2\}$
$A \times (B \cup C) = \{2, 3\} \times \{0, 1, 2\}$
$= \{(2, 0), (2, 1), (2, 2), (3, 0), (3, 1), (3, 2)\}$ ... (1)

$A \times B = \{2, 3\} \times \{0, 1\}$
$= \{(2, 0), (2, 1), (3, 0), (3, 1)\}$
$A \times C = \{2, 3\} \times \{1, 2\}$
$= \{(2,1), (2,2), (3,1), (3,2)\}$
$(A \times B) \cup (A \times C) = \{(2, 0), (2, 1), (3, 0), (3, 1)\} \cup \{(2, 1), (2, 2), (3, 1), (3, 2)\}$
$= \{(2, 0), (2, 1), (2, 2), (3, 0), (3, 1), (3, 2)\}$ ...(2)

(1) மற்றும் (2) -லிருந்து $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

**30.**
$A = \{0, 1, 2, 3\}, B = \{1, 3, 5, 7, 9\}$
$f(x) = 2x + 1$
$f(0) = 2(0) + 1 = 1$
$f(1) = 2(1) + 1 = 3$
$f(2) = 2(2) + 1 = 5$
$f(3) = 2(3) + 1 = 7$

(i) அம்புக்குறி படம்




(ii) அட்டவணை.

| $x$ | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| $f(x)$ | 1 | 3 | 5 | 7 |

(iii) வரிசைச் சோடி கணம்.
$f = \{(0, 1), (1, 3), (2, 5), (3, 7)\}$

(iv) வரைபடம்
$f = \{(x, f(x) / x \in A\} = \{(0, 1), (1, 3), (2, 5), (3, 7)\}$




**31.** $9^3 + 10^3 + ... + 21^3$
$= (1^3 + 2^3 + 3^3 + ... + 21^3) - (1^3 + 2^3 + 3^3 + ... + 8^3)$
$= \left[\dfrac{21 \times (21+1)}{2}\right]^2 - \left[\dfrac{8 \times (8+1)}{2}\right]^2$
$= (231)^2 - (36)^2 = 52065$

**32.**

| | $8x^2 - x + 1$ | |
|---|---|---|
| $8x^2$ | $64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1$ | |
| | $64x^4$ | (–) |
| $16x^2 - x$ | $-16x^3 + 17x^2$ | |
| | $-16x^3 + x^2$ | (–) |
| $16x^2 - 2x + 1$ | $16x^2 - 2x + 1$ | |
| | $16x^2 - 2x + 1$ | (–) |
| | 0 | |

எனவே, $\sqrt{64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1}$
$= |8x^2 - x + 1|$.

**33.** L.H.S $= A^2 - 5A + 7I_2$

$$A^2 = \begin{bmatrix} 3 & 1 \\ -1 & 2 \end{bmatrix}\begin{bmatrix} 3 & 1 \\ -1 & 2 \end{bmatrix}$$

$$= \begin{bmatrix} (9-1) & (3+2) \\ (-3-2) & (-1+4) \end{bmatrix} = \begin{bmatrix} 8 & 5 \\ -5 & 3 \end{bmatrix}$$

$$5A = 5\begin{bmatrix} 3 & 1 \\ -1 & 2 \end{bmatrix} = \begin{bmatrix} 15 & 5 \\ -5 & 10 \end{bmatrix}$$

$$7I_2 = \begin{bmatrix} 7 & 0 \\ 0 & 7 \end{bmatrix}$$

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



$$A^2 - 5A + 7I_2 = \begin{bmatrix} 8 & 5 \\ -5 & 3 \end{bmatrix} - \begin{bmatrix} 15 & 5 \\ -5 & 10 \end{bmatrix} + \begin{bmatrix} 7 & 0 \\ 0 & 7 \end{bmatrix}$$

$$= \begin{bmatrix} 0 & 0 \\ 0 & 0 \end{bmatrix} = 0$$

எனவே நிரூபிக்கப்பட்டது.

**34.** **கூற்று** : ஒரு நேர்கோடு முக்கோணத்தின் ஒரு பக்கத்திற்கு இணையாகவும் மற்ற இரு பக்கங்களை வெட்டுமாறும் வரையப்பட்டால் அக்கோடு அவ்விரண்டு பக்கங்களையும் சம விகிதத்தில் பிரிக்கிறது.

**நிரூபணம் :**

கொடுக்கப்பட்டவை : $\Delta ABC$ யில் AB-யின் மேலுள்ள புள்ளி D. AC-யின் மேல் உள்ள புள்ளி E ஆகும்.




**நிரூபிக்க :** $\frac{AD}{DB} = \frac{AE}{EC}$

**அமைப்பு :** DE || BC வரைக.

| எண் | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1. | $\angle ABC = \angle ADE = \angle 1$ | ஒத்த கோணங்கள் சமம். ஏனெனில் DE ‖ BC |
| 2. | $\angle ACB = \angle AED = \angle 2$ | ஒத்த கோணங்கள் சமம். ஏனெனில் DE ‖ BC |
| 3. | $\angle DAE = \angle BAC = \angle 3$ <br> $\Delta ABC \sim \Delta ADE$ <br> $\frac{AB}{AD} = \frac{AC}{AE}$ | இரு முக்கோணங் களும் ஒரு பொதுவான கோணத்தைக் கொண்டுள்ளது <br> AAA விதிமுறைப்படி <br> ஒத்த பக்கங்கள் விகிதச்சமம் |
| | $\frac{AD+DB}{AD} = \frac{AE+EC}{AE}$ | D மற்றும் E-ஐப் பயன்படுத்தி AB மற்றும் AC-ஐ பிரித்தல் |
| 4. | $1+\frac{DB}{AD} = 1+\frac{EC}{AE}$ <br> $\frac{DB}{AD} = \frac{EC}{AE}$ <br> $\frac{AD}{DB} = \frac{AE}{EC}$ | சுருக்குதல் <br> இரு பக்கங்களிலும் 1-ஐ நீக்குக. <br> தலைகீழாக மாற்றுக. |

தேற்றம் நிரூபிக்கப்பட்டது.

**35.**




$A\begin{pmatrix} -9 & -2 \\ x_1 & y_1 \end{pmatrix}, B\begin{pmatrix} -8, & -4 \\ x_2 & y_2 \end{pmatrix}, C\begin{pmatrix} 1, & -3 \\ x_3 & y_3 \end{pmatrix}, D\begin{pmatrix} 2, & 2 \\ x_4 & y_4 \end{pmatrix}$

நாற்கரத்தின் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{vmatrix} \text{ சதுர அலகுகள்}$$

$$= \frac{1}{2}\begin{vmatrix} -9 & -8 & 1 & 2 & -9 \\ -2 & -4 & -3 & 2 & -2 \end{vmatrix} \text{ சதுர அலகுகள்}$$

$$= \frac{1}{2}[(36+24+2-4)-(16-4-6-18)]$$

$$= \frac{1}{2}[58-(-12)] = \frac{1}{2}(70) = 35 \text{ சதுர அலகுகள்}$$

**36.** நடுப்புள்ளி $M(x, y) = \frac{x_1+x_2}{2}, \frac{y_1+y_2}{2}$

AB யின் நடுப்புள்ளி D




$\Rightarrow D = \left(\frac{-4+6}{2}, \frac{2+(-4)}{2}\right)$

$= \left(\frac{2}{2}, \frac{-2}{2}\right) = (1, -1)$

ABயின் சாய்வு $= \frac{-4-2}{6-(-4)} = \frac{-6}{10} = \frac{-3}{5}$

$\therefore$ CDயின் சாய்வு $= \frac{-1}{-3/5} = \frac{5}{3}$

$[\because CD \perp AB]$

$\therefore$ CD யின் சமன்பாடு

$y-(-1) = \frac{5}{3}(x-1)$

$3(y+1) = 5x-5$

$\Rightarrow 3y+3 = 5x-5$

$5x-3y-8=0$ தேவையான கோட்டின் சமன்பாடு ஆகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**37.** கலங்கரை விளக்கத்தினை AB என்க .

C மற்றும் D என்பன இரு கப்பல்கள் இருக்கும் இடங்கள் என்க.




மேலும், AB = 200 மீ

$\angle ACB = 30^\circ, \angle ADB = 45^\circ$

செங்கோண முக்கோணம் BAC-ல்,

$$\tan 30^\circ = \frac{AB}{AC}$$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{200}{AC} \text{ இதிலிருந்து}$$

$$AC = 200\sqrt{3} \quad \ldots (1)$$

செங்கோண முக்கோணம் BAD-ல்

$$\tan 45^\circ = \frac{AB}{AD}$$

$$1 = \frac{200}{AD} \text{ இதிலிருந்து}$$

$$AD = 200 \quad \ldots (2)$$

தற்போது, $CD = AC + AD = 200\sqrt{3} + 200$ [(1), (2)லிருந்து]

$$CD = 200(\sqrt{3} + 1)$$

$$= 200 \times 2.732 = 546.4$$

இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவு 546.4 மீ.

**38.** இடைக்கண்டத்தின் உயரம் $h$ எனவும் அதன் இருபுற ஆரங்கள் R மற்றும் $r$ எனவும் கொள்க .

இங்கு, $h$ = 45 செ.மீ, R = 28 செ.மீ, $r$ = 7 செ.மீ

எனவே , இடைக்கண்டத்தின் கன அளவு




$$= \frac{1}{3}\pi h\,[R^2 + Rr + r^2] \text{ க. அ}$$

$$= \frac{1}{3} \times \frac{22}{7} \times 45 \times [28^2 + (28 \times 7) + 7^2]$$

$$= \frac{1}{3} \times \frac{22}{7} \times 45 \times 1029 = 48510$$

எனவே , இடைக்கண்டத்தின் கன அளவு 48510 க. செ .மீ ஆகும்.

**39.** $h$ மற்றும் $r$ என்பன முறையே உருளையின் உயரம் மற்றும் ஆரம் என்க. இங்கு, $h$ =15 செ .மீ, $r$ = 6 செ .மீ

உருளையின் கனஅளவு $V = \pi r^2 h$ க. அ

$$= \frac{22}{7} \times 6 \times 6 \times 15$$

$r_1 = 3$ செ.மீ மற்றும் $h_1 = 9$ செ.மீ என்பன கூம்பின் ஆரம் மற்றும் உயரம் ஆகும்.

$r_1 = 3$ செ.மீ என்பது அரைக்கோளத்தின் ஆரம் ஆகும்

பனிக்கூழ்க் கூம்பின் கனஅளவு = கூம்பின் கன அளவு + அரைக்கோளத்தின் கனஅளவு

$$= \frac{1}{3}\pi r_1^2\, h_1 + \frac{2}{3}\pi r_1^3$$

$$= \frac{1}{3} \times \frac{22}{7} \times 3 \times 3 \times 9 + \frac{2}{3} \times \frac{22}{7} \times 3 \times 3 \times 3$$

ஒரு பனிக்கூழ்க் கூம்பின கனஅளவு $= \frac{22}{7} \times 45$

எனவே, தேவையான கூம்புகளின் எண்ணிக்கை

$$= \frac{\text{உருளையின் கனஅளவு}}{\text{ஒரு பனிக்கூழ்க் கூம்பின் கனஅளவு}} = \frac{\frac{22}{7} \times 6 \times 6 \times 15}{\frac{22}{7} \times 45} = 12$$

∴ தேவையான கூம்புகளின் எண்ணிக்கை = 12

**40.**

| $x$ | $d = x - \bar{x}$ | $d^2$ |
|---|---|---|
| 24 | –6 | 36 |
| 26 | –4 | 16 |
| 33 | 3 | 9 |
| 37 | 7 | 49 |
| 29 | –1 | 1 |
| 31 | 1 | 1 |
| 180 | $\Sigma d = 0$ | 112 |

$$\bar{x} = \frac{\Sigma x}{n} = \frac{180}{6} = 30$$

$$\sigma = \sqrt{\frac{\Sigma d^2}{n}} = \sqrt{\frac{112}{6}} = \sqrt{18.66} = 4.32$$

∴ மாறுபாட்டுக் கெழு $C.V = \frac{\sigma}{\bar{x}} \times 100\%$

$$C.V = \frac{4.32}{30} \times 100\% = 14.4\%$$

**41.** இரண்டு பகடைகள் ஒரு முறை உருட்டுவதால்

$$S = \begin{Bmatrix} (1,1), & (1,2), & (1,3), & (1,4), & (1,5), & (1,6) \\ (2,1), & (2,2), & (2,3), & (2,4), & (2,5), & (2,6) \\ (3,1), & (3,2), & (3,3), & (3,4), & (3,5), & (3,6) \\ (4,1), & (4,2), & (4,3), & (4,4), & (4,5), & (4,6) \\ (5,1), & (5,2), & (5,3), & (5,4), & (5,5), & (5,6) \\ (6,1), & (6,2), & (6,3), & (6,4), & (6,5), & (6,6) \end{Bmatrix}$$

$n(S) = 36$

முதல் பகடையில் இரட்டைப் படை எண் கிடைப்பது A என்க.

$$A = \begin{Bmatrix} (2,1), & (2,2), & (2,3), & (2,4), & (2,5), & (2,6) \\ (4,1), & (4,2), & (4,3), & (4,4), & (4,5), & (4,6) \\ (6,1), & (6,2), & (6,3), & (6,4), & (6,5), & (6,6) \end{Bmatrix}$$

$$n(A) = 18 \Rightarrow P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{18}{36}$$

முகமதிப்புகளின் கூடுதல் 8 கிடைப்பது B என்க.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

$$B = \{(2, 6), (3,5), (4, 4), (5, 3), (6, 2)\}$$
$$n(B) = 5$$
$$P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{5}{36}$$
$$(A \cap B) = \{(2, 6), (4, 4), (6, 2)\}$$
$$n(A \cap B) = 3$$
$$P(A \cap B) = \frac{n(A \cap B)}{n(S)} = \frac{3}{36}$$
$$\therefore P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$$
$$= \frac{18}{36} + \frac{5}{36} - \frac{3}{36} = \frac{18+5-3}{36} = \frac{\cancel{20}^{5}}{\cancel{36}_{9}} = \frac{5}{9}$$

**42.** $S_n = 7\,[1 + 11 + 111 + \dots\ n$ உறுப்புகள்$]$

$= \frac{7}{9}[9 + 99 + 999 + \dots\ n$ உறுப்புகள்$]$

$= \frac{7}{9}\{(10 - 1) + (10^2 - 1) + (10^3 - 1) + \dots (10^n - 1)\}$

$= \frac{7}{9}\{(10 + 10^2 + 10^3 + \dots + 10^n) - (1 + 1 + 1 + 1)\ n$ உறுப்புகள்$\}$

$$= \frac{7}{9}\left\{10 \times \frac{(10^n - 1)}{10 - 1} - n\right\} = \frac{7}{9}\left\{\frac{10}{9}(10^n - 1) - n\right\}$$

$$= \frac{70}{81}(10^n - 1) - \frac{7n}{9}$$

**பகுதி - IV**

**43. (அ) வரைமுறை:**

**படி 1 :** PQ = 4.5 செ.மீ. என்ற கோட்டுத்துண்டை வரைக.

**படி 2 :** புள்ளி P, வழியே $\angle QPE = 35^\circ$ என இருக்கும்படி PE வரைக.

**படி 3 :** புள்ளி P வழியே $\angle EPF = 90^\circ$ என இருக்கும்படி PF வரைக.

**படி 4 :** PQ-க்கு வரையப்படும் மையக் குத்துக் கோடு PF ஐ O விலும் PQ வை G யிலும் சந்திக்கிறது.

**படி 5 :** O மையமாகவும், OP ஐ ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைக.

**படி 6 :** G யிலிருந்து 6 செ.மீ. ஆரமுள்ள வில்களை வட்டத்தில் வெட்டுமாறு வரைக. அவை வெட்டும் புள்ளிகளை R மற்றும் S எனக் குறிக்கவும்.

**படி 7 :** PR மற்றும் RQ ஐ இணைக்கவும்

**படி 8 :** $\Delta PQR$ தேவையான முக்கோணம் ஆகும்.






உதவிப்படம்

(அல்லது)

**(ஆ)** விட்டம் $(d) = 6$ செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.




**வரைமுறை :**

**படி 1 :** O வை மையமாகக் கொண்டு 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக.

**படி 2 :** 8 செ.மீ நீளமுள்ள OP என்ற ஒரு கோடு வரைக.

**படி 3 :** OP -க்கு மையக்குத்துக் கோடு வரைக. அது, OP -ஐ M -ல் சந்திக்கும்.

**படி 4 :** M-யை மையமாகவும், MO-வை ஆரமாகவும் கொண்டு வரையப்படும் வட்டமானது முந்தைய வட்டத்தை A மற்றும் B-யில் சந்திக்கிறது.

**படி 5 :** AP மற்றும் BP யை இணைக்கவும். AP மற்றும் BP தேவையான தொடுகோடுகள் ஆகும். தொடுகோட்டின் நீளம் PA = PB = 7.4 செ.மீ

**சரிபார்த்தல் :** செங்கோண முக்கோணம் OPA-யில்

$$PA^2 = OP^2 - OA^2 = 64 - 9 = 55$$

$$PA = \sqrt{55} = 7.4 \text{ செ.மீ (தோராயமாக)}$$

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**44. (அ)** **படி 1 :** $y=2x^2-3x-5$ என்ற சமன்பாட்டின் மதிப்புகளை அட்டவணைப்படுத்துக.

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $2x^2$ | 32 | 18 | 8 | 2 | 0 | 2 | 8 | 18 | 32 |
| $-3x$ | 12 | 9 | 6 | 3 | 0 | –3 | –6 | –9 | –12 |
| $-5$ | –5 | –5 | –5 | –5 | –5 | –5 | –5 | –5 | –5 |
| $y=2x^2-3x-5$ | 39 | 22 | 9 | 0 | –5 | –6 | –3 | 4 | 15 |

புள்ளிகளை வரைபடத்தாளில் குறிக்க: (–4, 39), (–3, 22), (–2, 9), (–1, 0), (0, –5), (1, –6), (2, –3), (3, 4),(4, 15) புள்ளிகளைக் கொண்டு பரவளையம் வரைக.




**படி 2 :** $2x^2-4x-6=0$ ஐத் தீர்க்க, $y=2x^2-3x-5$ லிருந்து $2x^2-4x-6=0$ ஐக் கழிக்க

$$\Rightarrow y = 2x^2-3x-5$$
$$0 = 2x^2-4x-6$$
$$(-)\ (+)\qquad (+)$$
$$y = x+1$$

என்பது ஒரு நேர்க்கோட்டின் சமன்பாடு

**படி 3 :** $y=x+1$ -ன்; மதிப்புகளை அட்டவணைப்படுத்துக.

| $x$ | –2 | 0 | 2 |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | 1 |
| $y=x+1$ | –1 | 1 | 3 |

வரைபடத்தில் நேர்க்கோட்டிற்கான (–2, –1), (0, 1), (2, 3) புள்ளிகளைக் குறிக்கவும்.

**படி 4 :** $y = 2x^2 - 3x - 5$ என்ற பரவளையமும், $y = x + 1$ என்ற நேர்க்கோடும் வெட்டும் புள்ளிகளின் $x$ ஆயத்தொலைவுகள் –1 மற்றும் 3 ஆகும்.

எனவே சமன்பாடு $2x^2-4x-6=0$ ன் தீர்வுகள் –1 மற்றும் 3 ஆகும்.

(அல்லது)

**(ஆ)**

| $x$ | 1 | 2 | 3 | 4 | 6 |
|---|---|---|---|---|---|
| $y$ | 24 | 12 | 8 | 6 | 4 |

அட்டவணையிலிருந்து $x$ யின் மதிப்பு அதிகரித்தால் $y$ யின் மதிப்பு குறைகிறது என்பதை அறியலாம். இவ்வகையான மாறுபாடு எதிர்மாறுபாடாகும்.

$y\ \alpha\ \frac{1}{x}$ அல்லது $xy = k$ இங்கு $k$ விகித சம மாறிலி.

மேலும் அட்டவணையிலிருந்து அறியலாம்.

$1 \times 24 = 2 \times 12 = 3 \times 8 = 4 \times 6 = 6 \times 4 = 24 = k.$

$\therefore$ நாம் பெறுவது $k = 24$

(1, 24), (2, 12), (3, 8), (4, 6) மற்றும் (6, 4) புள்ளிகளை குறிக்கவும் மற்றும் அவைகளை இணைக்கவும்.




$\therefore$ ஆகையால் உறவு $xy = 24$ என்பது படத்தில் காட்டியுள்ளவாறு செவ்வக அதிபரவளையம் ஆகும்.

படத்திலிருந்து நாம் காணலாம்.

(i) $x = 3$ எனில் $y = 8$ (ii) $y = 6$ எனில் $x = 4$.